23 JUN 1914
SHIYALI.

குமரன்றுணை.

# இன்னிசையிருநூறு.

இது

சோழவந்தானூர் வித்வான்

அ. சண்முகம்பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்

பதிப்பிடப் பெற்றது.

மதுரை

விவேகபாநுப் பிரஸ்.

1913

*Copy Right.*

உ

குமரன் றுணை.

## இன்னிசை இருநூறு.

# பதிப்புரை.

இந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்களுள் ஒருவராகிய் சோழவந்தான் ஸ்ரீமத். அ. சண்முகம்பிள்ளை யவர்கள் இயற்றியது. பிள்ளையவர்கள் இற்றைக்குப் பத்து வருடங்கட்கு முன்னர் அவ்வப்பொழுது தம் மனத்துட் டோன்றும் நீதிகளையெல்லாம் பல இன்னிசை வெண்பாக்க ளாக வரைந்து வைத்தனர். ஒவ்வொரு வெண்பாவும் பண் டைத் தமிழ்நூல்களைப்போலவே வேற்றுமொழிக் கலப்பின் றித் தனித் தமிழ் மொழிகளானே யாக்கப்பெற்றுச் சொற் சுவையும் பொருட்சுவையும் மலிவுறக்கொண்டு விளங்குதலை யாவரு முணர்வர். அக்காலத்தே பிள்ளையவர்களிடம் இக் கவிகளையெல்லாம் கேட்ட யான் இவை பெரிதும் பயன்றரற் பாலனவெனக் கருதி 200 வெண்பாக்களைத் தொகுத்து இய ன்றவரை பொருட்பொருத்த நோக்கி 20 அதிகாரமாகப்பகு த்து "இன்னிசை யிருநூறு" என்ற பெயருடன் 1904ஷு விவேகபாநு 4-வது தொகுதியில் வெளியிட்டிருந்தேன்.

அதனைப்படித்து மகிழ்ந்த எனது நண்பர் பலர் அந்நூலைத் தனிப்புத்தகமாக்கித் தருமாறு வேண்டிக் கொண்டனர். மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனத்தில் இப்பொழுது மஹா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் சற்குருசுவாமிகளும் "இன்னிசையிருநூறு தனிப்புத்தகமாக வெளிவரின் நமது தமிழுலகுக்கு நற்பயன் விளைக்கும்" என்று என்னிடத்துக் கட்டளையிட்டருளினார்கள். அவ்வண்ணமே இப்பொழுது தனிப்புத்தகமாக வெளியிட்டிருக்கின்றேன். பிள்ளையவர்கள் இவ்வெண்பாக்களை யியற்றும்போது அதிகாரப்பகுப்பைக் கருதி இயற்றாமையாலும் யானாகவே இயன்றவரை பொருத்த நோக்கி அதிகாரப் பாகுபாடு செய்தமையாலும் சிற்சில கவிகள் சற்று வலிந்து பொருத்திப் பொருள் காணும்படி யமைந்திருக்கும். அறிவுடையோர் அதன் காரணத்தை யறிந்து அமைவார்களாக.

---

இங்ஙனம்

விவேகபானுப் பிரஸ்
மதுரை
1—7—13

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
வித்தியாபானுப்பத்திராதிபர்.

குமரன் றுணை.

# இன்னிசை இருநூறு.

## நூல்.

### முதல் அதிகாரம் வாழ்த்து.

நன்னெறிமுன் னீரி னறிவென்னு நாழியான்
இன்னிசை வெண்பா முகந்திசைப்ப வெண்ணுதூஉம்
பொன்னிறத்து மால்விடைப் புத்தே ளிடம்பிரியா
அன்னை சிறுவ ரடி. (௧)

போற்றுதூஉந் தன்க ணுயிரெல்லாம் பூத்தொடுங்கத்
தோற்ற மழிவின்றித் தோன்றுந் துகளிலியை
ஊற்றுக்கோ லென்ன வுயிர்த்துணை யாகறன்
ஆற்றிப் பிறப்பறுக்கு மாறு. (௨)

அங்கண் விசும்புமுத லேந்தொடு பல்லுயிரைச்
செங்கதிர்ச் செல்வனைத் திங்களைப் போற்றுதூஉம்
எங்கும் நிறைந்தொளி ரீறி லிறைவற்குத்
துங்க வடிவாத் துணிந்து. (௩)

---

௧. முன்னீர்—கடல். முகந்து—மொண்டு. நிறம்—மார்பு.
௨. துகளிலி—குற்றமில்லான்.

நாமகட் போற்றுதூஉம் நாமகட் போற்றுதூஉம்
தோமி லிறைவ னடிப்புணையாற் றுன்பமெனும்
நாமக் கடனீந்த நல்லறிவு மீகானை
ஏம மெனவீத லின். (ச)

நூலினைப் போற்றுதூஉம் நூலினைப் போற்றுதூஉம்
காலங் கருதாது காய மிறுவரையும்
வாலறிவ னற்ருள் வணங்கிப் பிறப்பறுக்கச்
சாலத் துணையா தலான். (ரு)

நீத்தாரைப் போற்றுதூஉம் நீத்தாரைப் போற்றுதூஉம்
நேத்திர மென்ன வுலகை நெறிநிறீஇ
மூத்த வறிவினு னூற்பொருண் முற்காட்டி
ஆத்தனையுங் காட்டிவிட லான். (சா)

தூய மலர்தூ யிறைஞ்சுதூஉந் தொண்டியற்றித்
தாய்தந்தை யாசா னிவர்தம்மைச் சார்பாய
காயமு நல்லறிவு மீந்து கடவுளை
ஆயத் துணைநிற்ற லான். (எ)

வானம் பரவுதூஉம் வானம் பரவுதூஉம்
ஞான முதல்வ னருள்போல ஞாலக்குப்
பானமு மாகி வளமும் பல வளித்துத்
தானே துணையா தலான். (அ)

---

ச. தோம்-குற்றம். நாமம்-அச்சம். ஏமம்-காப்பு.
ரு. இறுவரையும்—அழியுமளவும்.
சா. நிறீஇ-நிறுவி. ஆத்தன்-கடவுள். அ. ஞாலக்கு-ஞாலத்துக்கு.

சிந்தித்து வாழ்த்துதூஉஞ் சிந்தித்து வாழ்த்துதூஉம்
நந்தா வறத்தை யிறைவனே நாடுயிர்க்கு
முந்துறத் தன்னையு மேனைய மூன்றையும்
தந்தே துணையா தலான். (௯)

அன்பினைப் போற்றுதூஉ மன்பினைப் போற்றுதூஉம்
அன்பு மறிவனும் வேறென்ப வாய்விலார்
அன்பே வடிவா யறிவ னமர்தலின்
அன்பே யுயிர்காத்த லான். (௧௦)

முதலாவது அதிகாரம் வாழ்த்து முடிந்தது.

---

## இரண்டாவது அதிகாரம் அறம்.

மெய்யறிவ னூலின் விதித்த விலக்கிய
செய்தலுஞ் செய்யா விடலுந் திகழறன்
மைதீர் மனநாவாற் காயத்தால் வாய்ப்பன
செய்கவெஞ் ஞான்றுந் தெரிந்து. (௧)

ஞானியெனத் தேவனென நல்லனெனச் செல்வனெனக்
கோனெனப்பல் கோடி கொடுக்குஞ் சிறப்பினையும்
ஈனு மறந்தா விடர்பலவு மீனுமால்
ஆனது செய்க வறன். (௨)

---

௯. நந்தா—அழியாத. மூன்று—பொருள் இன்பம் வீடு.

௧௦. அறிவன்—கடவுள்.

௨. ஆனது—குறையாமல்.

சிவாநினக்கே யோவா தறவினை செய்வேன்
அவாவேன் பிறவன் பளியெனல் வேண்டும்
உவாமதி பாம்போ டுறுவது போலும்
அவாவொடு கூடு மறன். (௩)

சினகரம்போய்த் தீர்த்தம்போய்ச் செய்யினு நன்மை
வினைவேறு சிந்தையும் வேருகு மாயின்
மனநற் றளியொளிர் வாலறிவற் காணுர்
தினையளவு நீங்கார் திருக்கு. (௪)

நன்றென்ப கண்ணப்பர் செய்கரும நாடுங்கால்
அன்றென்ப தக்கனுர் செய்த வறவினை
ஒன்றும் மனத்தியல்பாற் சொல்லு முறுவினையும்
என்றிவை மாற வியல்பு. (௫)

சொல்லுமவர் வித்திடா தெய்ப்பிற் றுகளெய்தும்
செல்வறப்பிற் கேடுறினுஞ் சேரா பழியவற்கு
நல்ல வினைதொடங்க னங்கடனு முற்றுக்கால்
இல்லையே நிந்தை யெமக்கு. (௬)

---

௩. ஓவாது—இடையரு து.

௪. சினகரம்—ஆலயம், தளி—கோவில்.

௬ துகள்—குற்றம், செல்—மேகம்.

தினையளவு மீசன் செயல்கடப்பார் யாரே
மனையே பொருளே மகவேயா தானும்
வினையா விழுப்பினும் மேவினும் பன்னோப்
இனையா திறனியற்ற லின்பு. (எ)

இயமாதி நோய்தரினு மெய்ப்பின்று செய்க
முயல்கடை போயின் முடியாப்பே ரின்பப்
பயனெய்துங் காமாதி யின்பம்போற் பற்றும்
இயல்பினநீக் காமை யிடர். (அ)

மலைத்துணைப் பஞ்சுமொரு தீப்பொறியான் மாயுந்
தலைப்பட்ட நல்லறம்பல் கோடியுஞ் சாயும்
நிலைப்பட்ட சான்றோர்க்கோர் தீங்கியற்றி னீள்வான்
தலைப்பட்டுச் சாய்நகுடன் சான்று. (கூ)

பேய ரொடுபாலர் பித்தரென மெய்யறிவின்
தூயர் வழீஇ நடப்பினுஞ் சூழற்க
ஆயுங்கா லவ்வா றெழுக வவாவல்நரி
சீயவினை மேற்கொள் செயல். (கO)

இரண்டாவது அதிகாரம் அறம் முடிந்தது.

---

எ. இனையாது—வருந்தாமல்.

அ. முயல்—வினை.

கO. வழீஇ—வழுவி. சீயம்—சிங்கம்.

# மூன்றாவது அதிகாரம் இல்வாழ்

விருந்தோம்ப றென்புலந் தெய்வம் விரும்பல்
மருந்தானு மொக்கலுட னுண்டு மகிழ்தல்
பெருந்தவ ராதியோர்ப் பேணலிவை யில்லத்
திருந்தார்க் குரிய வியல்பு. (௧).

நல்ல குடிப்பிறந்து நாற்குணமு மேற்கொளீஇ
எல்லை கடவா வியற்கற்பி னாண்மனையா
இல்லற மேயினா ரேனை யறத்தாற்றிற்
செல்லாதுஞ் சேர்வர் சிறப்பு. (௨)

இல்லாளுந் தானு மனத்தா னிரண்டென
நில்லா தறஞ்செய்து நிற்க துறவிற்பின்
வெல்லாப் புலமைந் தவித்த விழுமியோர்
அல்லார்க் கிளமை யரில். (௩)

துய்யபுகழ்க் கற்பாற் றொழப்படுவாண் மெய்ஞ்ஞானம்
எய்து மருந்தவத்தோர் தேவ ரெவராலுந்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. (௪)

---

௧. ஒக்கல்-சுற்றம்

௨. கொளீஇ-கொண்டு. ஏனையறம்-துறவறம். சிறப்பு-வீடு

௩. அரில்-துன்பம்

௪. தவத்தோராலுந் தேவராலுந் தொழப்படுவாளும் தெய்வந் தொழாளுங் கொழுநற் றொழு தெழுவாளுமாகிய பெண் பெய்யென மழை பெய்யுமெனக்கூட்டுக.

யறம்பல பன்றி பயப்பினு மென்மன்
கறையடி சுட்டுறுங் கன்றென்றீன் றாலும்
பிறைபோ லறிவு பெருகு மகவொன்
றுறினுறுவ வேறென் னுள. (௫)

பேதைமை மக்கட் பெறலிற் பெருமையாற்
றீதின் றவமதிப்பு மின்னாவுஞ் சேராவாம்
நீதிநெறி நின்றார் பெறூர்புன் னெறியொழுகி
வாதைதரு பேதை மகவு. (௬)

மன்னுயிரைத் தன்போன் மதிக்கு மருளானே
துன்னுமுயிர் வீடெனினு மஃதுந் தொடர்பின்கண்
முன்னுறு மன்பான் முளைத்தெழூஉ மஃதின்றேல்
என்னபய னென்றானு மில். (௭)

உடையானை யுள்ளத் துடையானென் றானும்
உடையான் பசிகுளிர்கண் டுள்ளத் துடையான்
உடையானா னற்றா னுறுவதுடை யானன்
புடையா னுடையா னுயிர். (௮)

(பதவுரை) உடையானை-இறைவனை. உள்ளத்து உடையான்-உள்ளத்துச் சிந்திக்குமொருவன். ஒன்றானும் உடையான்- ஒருவகையாலும் அழியான். பசி குளிர் கண்டு-பிற உயிரின் பசியையுங் குளிரையுங் கண்டு. உள்ள-அவ்வுயிர் தன்னை நினையுமாறு. துடை

---

௫. பறழ்-குட்டி. பயப்பினும்-பெற்றாலும். கறையடி-யானை. சுட்டு-மதிப்பு.

யான்-அத்துன்பத்தை நீக்காதவன். உடையான் ஊனன் தான் உறுவ துடையான்-உடையானும் ஊனனுந் தான் பின்னர் எய்தும் துன்பத்தை நீக்காதவனுவான். ஆதலின், அன்புடையான் உயிரு டையான் -அன்புடையானே உயிருடையானுவன் என்றவாறு.

இன்ன லுறுமேபே ரின்பந் தருநெறி
உன்னி னுளதா லுஞற்ற லரிதன்றால்
என்நல மேனு மிழப்பிலஃ தெவ்வுயிருந்
தன்னுயிர்போற் காணுறாஞ் சால்பு. (கூ)

பாத்தூ ணறிந்து பகைவெல்ல னீராடல்
நீத்தறுயில் காலை பிறனி னினையாமை
சீர்த்த முயற்சியிவை காக்கையினைச் சிற்றெறும்பைப்
யார்த்துங்கொள் ளாமை பழி. (கO)

மூன்றுவது அதிகாரம் இல்வாழ்க்கை முடிந்தது.

---

கூ. இழப்பு இல்-இழத்தலில்லை. அஃது -இன்பந்தருமந்நெறி.

கO. அறிந்து-காலம் இட முதலியன அறிந்து. காலை நீரா டல் காலை துயில் நீத்தலெனக் கூட்டுக. பிறனில் நினையாமை-பிறன் மனை விழையாமை. இவ்வைந்துங் காக்கைக்கு இயற்கை. சீர்த்த முயற்சி யெறும்பினியற்கை.

# நான்காவது அதிகாரம் கூடாவொழுக்கம்.

---

தமதிற் பிறர்தொடினுந் தாம்பொரு ரென்னே
அமைவின் றயலாடோட் சேரற் கமர்வர்
நமனுல கெய்தி நலிவெய்தற் கன்றே
சுமையா விவர்தோன்றி னர். (௧)

அறநெறியா னஞ்சா தடைதலை யின்பம்
புறநெறியா னஞ்சியயல் புக்கென் பெறுங்கொல்
இறுமுயிர்கால் கையிழக்கு மெய்தும் பழியும்
அறைபோந் திருவோ டறன். (௨)

பிறன்மனை வேட்டொழுகு பேதைநீ நூழி
மறலி யுலகத்து வைகிப்பின் வந்தே
பிறனலந் தன்மனை பெட்டுத்தற் பேணு
துறனேக்கி நோத லுறும். (௩)

பிறனில் விழைந்த பொழுதே பிறங்கும்
அறிவு மழுங்குமா லாளுமா லச்சங்
குறையுமா லாண்மை குடிபுகுமால் வஞ்சம்
புறம்புறுமா னட்புப் புகழ். (௪)

---

௨. புறநெறி-பாவநெறி. அயல்-அயலான் மனைவி. உயிர் இறும், கால்கையிழக்கும், பழியு மெய்தும் என்க.

௩. வேட்டு-விரும்பி. மறலி-யமன். பெட்டு-விரும்பி.

செல்லாம லிச்சைவழிச் சிந்தை யிறையினிறீஇ
நல்லநாட் பூப்பின்பி னாடிக் கவலின்றி
இல்லா ளிடத்துமன்பா னன்மக்கட் பேறெண்ணி
அல்லான் முயக்க மவம். (௫)

கொண்டானிற் றீர்ந்தயலாற் கூடி யொழுகுவாட்
கண்டாலும் பாவ மிருமரபுங் காய்கதிரோன்
உண்டா மளவு முறும்பழியாங் காணேமிப்
பெண்டேபோற் றீய பிறப்பு. (௬)

தாக முறினுமழை தன்வாய்ப்பட் டாலன்றி
ஆகாப் பிறநீ ரருந்தலிலே சாதகப்புள்
தேகமுறு வேளெனினுஞ் செல்லாள்பெண் கொண்டான்பாற்
போக மறினும் புறன். (௭)

ஆழி விரற்றுணையா வாக்குப வங்குலியை
ஆழியள வாக்கா ரஃதொப்ப வாடூத்தான்
வீழு மவளைத்தன் னிச்சைவழி வீழ்த்தலன்றித்
தாழுமோ பெண்மனம்போற் சாய்ந்து. (௮)

---

௫. இச்சைவழிச் செல்லாமற் சிந்தையை யிறைபாணிறீஇ பூப்பின்பின் நல்லநாள் நாடிக் கவலின்றி நன்மக்கட் பேறெண்ணின் அல்லால் இல்லாளிடத்தும் முயக்கம் அவம் என்க.

௬. உறும்பழி-பழியுறும். யாம் காணேம் எனப் பிரிக்க.

௭. ஆகாப்பிறநீர் - சாதகப்புள் தான் ஆகாதென்று கொண்டதாகிய பிறநீர். அது-மழைநீரல்லாத ஆற்றுநீர் முதலிய பிறநீர் பெண், வேளெனினும் புறன் செல்லாள் என்க.

௮. அங்குலி-விரல். வீழ்தல்-விரும்பல்.

தொழுநோய் முதற்பல சூழு நிரப்பாம்
இழுதையென் றெள்ளுவ ரீன்றுருங் கற்புப்
பழுதுறு மாமனைக்குப் பண்புடை யாளர்
ஒழிகபொருட் பெண்டீ ருறவு. (கூ)

கன்னி விலங்கு கலன்கழிந் தாரிவர்த்
துன்னி முயங்கிய தீயவர் தோய்ந்தெழாஅர்
மன்னு நிரயம்பல் லூழியின் மாழ்குவர்
நன்னரில் பேடா நடித்து. (க0)

நான்காவது அதிகாரம் கூடாவொழுக்கம் முடிந்தது.

---

## ஐந்தாவது அதிகாரம் நல்வினையாட்சி.

செல்வமுங் கல்வி யிலையேற் சிறப்பில்லை
கல்வியு நுண்ணறி வின்றேற் கணிப்பில்லை
எல்லா மிருப்பினு நல்லொழுக்க மில்லாயின்
வல்லார்க்கு மில்லை மதிப்பு. (க)

வஞ்சத்தாற் செய்த சிறுநன்றும் வானளவின்
எஞ்சா தெனமறவா தின்னுயிரு மீபவே
விஞ்சு பயனறிந்த மேலோர் விழுச்சான்று
மஞ்சார்கை மத்திரத்தார் மன். (உ)

---

கூ. நிரப்பு ஆம் -சரித்திர முளதாகும்.

உ. மஞ்சார்கை மத்திரத்தார்மன்-மேகத்தை யொத்தகையை யுடைய சல்லியன்.

இன்சொற் பிறர்சொலிற்று மின்பமுறன் மெய்யதனல்
என்பொருளு மெஞ்சாவே யென்பு மனம்வருந்தா
அன்புறுவ ரொன்னுரு மச்சோ வஃதறிந்தும்
வன்சொலுரைப் பார்க்கென் வரவு. (௩)

செய்யாமற் பேருதவி செய்தார்கொன் றன்னவிடர்
செய்தா ரயலா ரெனுந்திறன் றேராமே
எய்துவ கேடெனினு மாக்கமென் றெண்ணிநடு
எய்தலே மேலோ ரியல்பு. (௪)

உண்ணுஞ் சுவையுணர்ந்து மோதலிலா நாப்போல
எண்ணில் பொருள்கண்டு மென்கொல் பயனின்றே
புண்ணே யெனப்படூஉம் போந்தாருண் ணோக்கறிந்து
கண்ணோட்டஞ் செய்யாத கண். (௫)

புள்விலங்கி னுள்ளும் பொருளுணர வல்லவுள
விள்ளுங்காற் கண்முகம் நோக்கி விளைவுணரின்
ஒள்ளிய மக்களா மஃதின்றே லூர்ந்துயிர்ப்புக்
கொள்ளுமர மென்றே கொளல். (௬)

உள்ளம் பொறிநா வொடுங்கலுறிற் பள்ளம்போம்
வெள்ளமென நாற்பொருளு மேவும் பிறவடக்கம்
கொள்ளா னெனினுமொரு நாவடக்கங் கொள்கதப்பிற்
கொள்ளு மளப்பில் குறை. (எ)

---

௩. என்பு-உடல்.

இறத்தலெஞ் ஞான்று மிலையாயி னுவி
துறத்த லொழிக துறந்தபின் மானம்
இறத்தல் கடந்தா ரெவர்கூற்ருன் மாய்விற்
சிறத்தலுறுஞ் சீர்ப்பொருட்டான் மாய்வு. (அ)

எச்சநீ ராவிற்கீ கென்னினு நன்ருகா
எச்சிறுமை யானு மிரவற்க வில்லறத்தார்
பிச்சையேற் றுண்கை துறந்தார்க்கே பெற்றியாம்
இச்சைவெறுப் பில்லாமை யின், (கூ)

செல்வம் விரும்பிற் பிறர்க்களிப்பத் தேடுக
கல்வி விரும்பி னெறிநிற்பக் கற்கமன்
அல்லலிலா வின்பமுற வெண்ணி யருநெறியிற்
செல்லினிடர் நோன்றல் செயல். (க0)

ஐந்தாவது அதிகாரம் நல்வினையாட்சி முடிந்தது.

---

## ஆருவது அதிகாரம் தீவினை அச்சம்,

பிறர்பொரு ளன்ன துணரா து பெட்பின்
சிறிய கொளினுமவை நஞ்சினுந் தீய
இறைவ னெறுக்கும் பிழைப்பினு மென்றும்
உறைப விருள்சே ருலகு. (க)

ஆறலைத்தல் கொள்ளை யதிகாரம் பொய்வஞ்சம்
சீறி வெருட்டல் குறைமுடிப்பல் செய்வலினிப்
பேறென லின்ன பிறரறிய வெளவினும்
வேறல்ல கள்ள வினை. (உ)

---

உ. ஆறலைத்தல்-வழிப்பறி,

பயனில் பொருணற் பயன்படு மாறும்
நயனில் கடுமுத னல்லுயிர் மாயாது
உயவும் குறித்தோர்ந் துரனுடையார் கள்ளிற்
செயிர்தீ ரறமாஞ் சிறந்து. (௩.)

மன்னுயிர்க்குத் தூய நலந்தருஞ்சொல் வாய்மையே
இன்னா விளைக்குஞ்சொல் பொய்யே யிஃதுணர்ந்து
தன்னெஞ் சறிவது பொய்யாமைச் சாற்றலுறின்
என்னபிற வில்லெனினு மென். (௪)

ஒழுக்கம் பிழையாரைப் பொய்சொற்று மோம்பல்
விழுப்பமா மவ்வுரையால் வெய்யரைக் காத்தல்
இழுக்கா முயர்ந்தார் பொருட்டு மியம்பார்
வழுக்கியும்பொய் சான்றோ ரின். (௫)

மற்றோர்பாற் சொல்லேனென் றேற்ற மறைமொழியைப்
பிற்றைப் பிறர்போய்ப் பெரிது வருத்தினும்
உற்ற துரைப்பது பொய்யா முதுமறைத்து
மற்றொன்று கூறல் வழக்கு. (௬)

பிறர்தம்மின் மேலா வினையாப் பிறங்கிற்
பொறுதிழிபு கண்டக்காற் புன்மை மகிழ்ப
சிறுமை யுறுங்கா லழுங்கிச் சிறந்தால்
உறுபவே சான்றோ ருவப்பு. (எ)

---

௩. கள்ளில்-திருடினல்.

௬. உது-இது.

எ. புன்மை-கீழோர்.

பிறராக்கங் காணிற் செவிக்கொளிற் பேணப்
பொறுமை கயவருள்ளும் யார்மாட்டும் போகா
மறலியின் மிக்கொறுப்ப வந்தெய்து நாடி
அறன் முற்று மில்லா நகம். (அ)

மகளிர் கருச்சிதைத்தல் கற்பழித்தல் வைப்போர்
உகவில் முதல வுலப்பத்தீ வைத்தல்
அகவையவ் வாண்டே யறவெரிவா யாழ்த்தும்
மிகல்வினை யீண்டுமுறன் மெய். (கூ)

கூலி கொடாதுங் குறைத்தும்பன் னுட்கழிப்பிச்
சால வருத்திப்பின் றந்து மனர்செய்தும்
வேலைகொள் வார்க்கிருட் பார்விட்ட பின்னராம்
போலும் சிவிகைப் பொறை. (க0)

௬-வது. அதிகாரம் தீவினை அச்சம் முடிந்தது.

---

கூ. லவ-லைக்கோல். உக-கெட. உலப்ப-அழிய.

க0. அனர்-துன்பம். இருட்பார்-நரகம்.

# ஏழாவது அதிகாரம் ஈகை.

உடல்பொரு டாமே படைத்தா ருளரோ
உடையா னிறையே யொழியா வறத்தின்
நடையார் பிறர்க்களிப்ப நல்கின ஞடித்
தடையின்றி யொல்வ தரல். (க)

காயமும் பொன்னுங் கனப்போ லழியுங்காண்
பேயே யெனக்காத்துப் பின்னுவ வென்றெண்ணி
ஈயாமை தானுநன் றென்றுமவை யொன்றுவேல்
சாயாமுன் வாய்ப்ப தரல். (உ)

கூறை மருந்தொடு சோறுங் கொடுமினே
ஊறுசெய் தீய ரெனினு முடன்விரைந்து
வேறு கொடுப்பவே மேலவர்த் தேடுதல்
மாறிலா நூலோர் வழக்கு. (ங)

பண்புபல பெற்றுமினம் பேணுப் பரிசினுய்
புண்படூஉங் காக்கைபல பொல்லாக் குணம்பெற்றும்
உண்ப விளித்துதவு மாற்றி னுயர்வுறூஉம்
எண்பெறுர் பாத்தூ ணிலார். (ச)

பாரி ததீசி பலிகன்ன ஞதியோர்
ஓரி னிணையில் வணிக முஞற்றினர்
நீரி னெழுத்தேர் நிலையாப் பொருள்கொடீஇப்
பேரா நிலைப்புகழ் பெற்று. (ரு)

---

க. தரல்-தருக.

ஈப்பிற் பிறமிக்க நல்லன இல்லவா
நீப்பிற் பிறமிக்க வீடில்லை நீடுயிர்க்
காப்பிற் பிறமிக்க கொள்வவில் வள்ளுவன்
யாப்பிற் பிறமிக்க இல். (சு)

ஏற்றது மூவடிமண் என்னினு மூவுலகென்
றூற்றலாற் காட்டி நெடியோ னருள்செய்தான்
பேற்றையளப் பார்யார் பெரியார்க்கே தானுமொன்று
போற்றி யளித்தல் பொருள். (எ)

மாணறிவ ரென்றுணரின் வன்பகைஞ ரானாலும்
பேணிக் கலைப்பொருளு மீதல் பிழையன்றே
பூணுடல் பொன்றினும் பொன்றா புகழுடல்
காணிற் றுரோணன் கரி. (அ)

த்தாழைமுள் பாம்பொடு தானுறினு மப்பூவைச்
சூழ்மணத்தாற் சென்னிமிசைச் சூடுப வீகையினுன்
கீழ்குலத்தான் தீயார்க் கெழுமியா னுயினுஞ்சீர்
சூழ்தலான் வையந் தொழும். (கூ)

கொடுப்ப தழுக்கறுப்பான் கோடித் தடுப்பான்
தடுப்ப நினைப்பா னிவர்சுற்றந் தாமும்
உடுப்பதூஉ முண்பதூஉ மின்றி யுழன்றே
அடுப்ப கொடிய அளறு. (கo)

7-வது அதிகாரம் ஈகை முடிந்தது.

---

சு. ஈப்பு—கொடை.

கo. அழுக்கறுப்பான்—பொறாமையுறுவோன். அளறு—நரகு.

# எட்டாவது அதிகாரம் துறவு

—:0:—

மகவு மணிபொன் களைகண்மாய் வொன்றால்
பகைமிடி சோம்பு பருவர லாசை
வெகுளியா னுமெனின் மேற்கடை போகா
துகளறவாய்ந் தெய்தல் துறவு. (க)

வஞ்சத் துறவால் மனிச்சர் மயங்குற
நெஞ்சிற் றுறவார் படிற்றொழுக்கில் நின்றவர்
நஞ்சிற் கொடியர்பின் வீழ்ந்தெழார் நைந்துளம்
அஞ்சக் கொடிய வளறு. (உ)

புறத்துமனஞ் செல்லாமே வேட்டுவன்பாற் புக்க
திறத்தாற் புழுவு மதன்வடிவாம் தேரின்
அறக்கடலா மண்ண லடிசேர்ந்தா லன்னோன்
இறப்பிலுரு வெய்த வியல்பு. (௩)

பாலை கடந்தினிய பூஞ்சோலை பற்றற்கு
மேலாஞ் சிவிகைமிசைச் செல்வான் விரும்புமோ
கோலுங் குடைசெருப்பு மெய்யுணர்ந்தார் கொள்ளாரே
மேலாய யோகும் விழைந்து. (ச)

---

க. களைகண்-பற்றுக்கோடு. பருவரல்-துன்பம்.

உ. படிற்றொழுக்கு-பொய்யொழுக்கம்.

ச. சிவிகையிற்செல்வார் குடைமுதலியவிரும்பாமைபோல் மெய்யுணர்ந்தார் சரியைகிரியை யோகங்களை விரும்பார்.

ஒருதலை யேனு முணவினுயிர் நிற்றல்
வருவாய்க்குத் தக்க வயிறுகொள் ளின்றே
பொருபசிக்கு நேர்வ புசிப்பினிதா மன்றிப்
பெருவாழ்வு வேண்டல் பிழை. (௫)

எண்ணி னிரத்தந் தசையே யிருகொங்கை
புண்ணொன்றே வல்குல் புழுக்கும்பி சேறுநிறை
துண்ணென் குழியஃதே துன்புறுதீச் சூழ்நரகு
பெண்ணாசை சாலப் பிழை. (௬)

காவாமை யாற்பலநோய் காப்பினுநோய் பற்பலவே
யாவானுஞ் செய்வதுநோய் செய்யாமை யானுநோய்
சாவாமை நோய்சாவு நோய்காண் தவிர்கவே
ஆவா வுடற்க ணவா. (௭)

ஆசைப்பேய்க் கோட்பட்டா னண்ட மளவில
பேசப் பெறினும் பயனென்கொல் பீழையே
ஆசையிலாற் கொன்றானு மில்லெனினு மல்லலில்
ஈச னவனே யெனல். (௮)

இல்லார் பொருள்நாடல் வையத் தியற்கையே
எல்லா முடையார் விரும்பார்மன் னெப்பொருளும்
நில்லாமை யுள்ளி நிராசைப் பொருள்பெறின்
இல்லாப் பொருளியாது மில். (௯)

---

அ. எனல்-என்க.

இச்சை யறுத்துயர் மெய்யுணர் வெய்தினோர்
எச்சம யத்தி லிருப்பினு நீங்கினும்
பிச்சை புகினும் பெருமுயல் கொள்ளினும்
உச்சிமேற் கொள்ளு முலகு. (க௦)

எட்டாவது அதிகாரம் துறவு முடிந்தது.

## ஒன்பதாவது அதிகாரம் வெகுளாமை.

—:0:—

சிறுமைபிறர் சொல்லிற் பொறுது சினத்தல்
அறிவன்றஃ துண்மை யாயின் மகிழ்க
பிறிதாயின் நிந்தை அவர்க்கே தமக்கென்
பொறையே யறிஞர்க்குப் பூண். (க)

நூலறியா மாக்கள் துணங்கறி வின்மையால்
சால விழித்தாங் கொறுப்பினும் தாம்பொறுக்க
மேலோர் சிறியோர் வினைமதியார் கொல்வாரியார்
காலானே ஈமிதித்தக் கால். (உ)

கேடு பிறராற் கெழீஇயினுந் தாஞ்சினவார்
கோடா மனத்தவர் கூர்ந்துணரி னெப்பயனும்
பீடுறு மூழா னலதில் பிறர்கருவி
நாடினம்பை நோதல் நகை. (ந)

வல்லோற் சினந்துதக்கன் நொந்தான் வலிகொண்டே
அல்லல் விளைத்து மழிந்தான் சுயோதனன்பின்
செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற. (ச)

நட்டாராற் கேடு வரலுமுள் நாடாமே
ஒட்டா ரெனச்சினந் தூறவர்க் கெண்ணற்க
வெட்டார் நெறிபிழைத்து வீழினுங்கால் நாக்கடிக்கப்
பட்டாலுந் தட்டார்தம் பல். (ரு)

ஆசா னவையி லுயிர்க ளரிய நூல்
ஈசன் பசுப்பெண்டிர் சேய்நண்ப ரின்னரை
ஏசினர்க் காணிற் பொறைதீ தினிதொறுத்தல்
காசில் வலியிருந்தக் கால். (சு)

இல்லாள்சேய் சீட ரிணக்க முடையவர்
நல்ல நெறிபிழைப்பிற் செல்லி னவைநெறிக்கண்
சொல்லும் பொறைதீ தினிதே துயர்மிகப்
பல்கா விடித்தொறுக்கும் பண்பு. (எ)

மெய்யுணர் வுற்றுயர் வித்தகரைப் பித்தரென
வைய மிகழினும் நெஞ்சத்து மாசறுதல்
எய்துநா ளென்றுகொலா மிப்பித்தர்க் கென்றவர்
செய்வரருள் கொள்ளார் சினம். (அ)

அங்கி தனைக்கொதிப்பச் செய்யினு மந்நீரம்
பொங்காது சில்கணத்தே தண்ணெனல் பூணுமால்
புங்கவர்பாற் சீற்றம் பொருந்தத்தீ யார்செயினுந்
தங்காது செய்யார் தவறு. (கூ)

தம்மை யிகழனுட ருங்களவு நோவுறுத்தல்
வெம்மை மனக்கு விளைத்தலிவை கீழ்செய்யில்
சும்மா இருப்ப! பெரியார் துயர்மிக்கால்
அம்மா பொறையு மரிது. (க0)

ஒன்பதாவது அதிகாரம் வெகுளாமை முடிந்தது.

---

## பத்தாவது அதிகாரம் இன்னாசெய்யாமை.

—:0:—

எல்லா வுயிரு மிறைவனுட லாதலிற்றும்
அல்லல் பிறசெய்யிற் றுன்புறவி னுயுங்கால்
கொல்லாமை யொன்றே தலையாய நல்லறன்மற்
றெல்லா மதன்பி னெழும். (க)

புரவலர் வீரர் புரைதபு நீதி
மரபிற் பிறவுயிர் மாய்ப்ப வரினும்
கரையக லன்பு கசிந்துரு காரேல்
வெருவுறு பாவம் விடா. (உ)

---

உ. புரைதபு—குற்றமற்ற.

தூப விடுத்தாயுள் தேய்த்துத் துயர்தரூஉம்
தீய புலானுண்ணி னல்லறிவுந் தேயுமால்
சீயத்தின் வாழ்நாள் சிலவாந்தந் தீனியல்பால்
காயநெடி தூப்க்குங் கரி.

வாழ்நா ளூட்டனறிவு தேய்வொன்றோ மற்றுப்பின்
ஊழிற் கொலைவினையு நெஞ்சி னுவக்குமால்
சூழிற்றான் கொல்லாவூன் றுய்ப்பினுந் தீதுடல்
வீழி னரகுறுதன் மெய்.

எண்ணிலநோ யொன்றானு மேகு மொருநோய்க்கே
உண்ணப்பல் கோடி யுளவே மருந்தந்நோய்
மண்ணின் வினைதீர் வழியொன்றுண் ணாமலும்போம்
உண்ணற்க நோயுறினு மூன். (௫)

தின்றன வெல்லாம்பின் றின்னுவ வன்பின்றிக்
கொன்றன கொல்ப குறைப்ப குறைத்தன
ஒன்றும் பிழையாதென் றுன்னியுயிர்க் கூறுசெயார்
என்றும் பிறத்த விலர். (௬)

ஆற்றலிலா தாரென் றயல்கெடுப்பச் சூழற்க
கூற்றுவ னுண்மை குறிக்கொளல் வேண்டுமால்
நேற்றிருந்தா ரின்றழியக் கண்டு நினைவிலார்
சாற்றினுங் கேளார் தடுத்து. (௭)

---

௩. சீயம்-சிங்கம். கரி-யானை.

ஏதிலார் குற்றங்க ளூட லியல்பன்றால்
தீதிலார் யாவருளர் தேரி னரியரே
நோதக்க வெவ்வுயிர்க்குஞ் செய்யாமே நுண்ணறிவோர்
மேதக்க செய்ப விழைந்து. (அ)

தீயாரை யேனோர் சினந்து சிதைக்குங்கால்
தூயர் தடாஅர் துகளுறு மென்றஞ்சித்
தீயரல் லாரிடர் தீர்ப்பரே தம்முயிர்
சாயினு மஞ்சாது தாம். (கூ)

கொல்லக் கருதிலியா னென்னதெனல் கொல்கமன்
வெல்லக் கருதிற் புலனைந்தும் வெல்கநலம்
புல்லக் கருதிற் பரனன்பே புல்லுகசீர்
சொல்லக் கருதிற் சொலல். (க0)

பத்தாவது அதிகாரம் இன்னா செய்யாமை முடிந்தது.

---

## பதினோராவது அதிகாரம் பொதுவியல்.

—:0:—

திருவா னறிவு மறிவாற் றிருவும்
வரவி லவைபூழ் வகையான் வருவ
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. (க)

---

க. வரவில்—வருதலில்லை.

ஈரத் திரியி னிருந்தகளி நெய்த்திரியில்
சாருந் தழலொப்ப நூற்பொருள் சாருமால்
சூரியர் மந்தருமைச் செல்வங் குறுகுமே
யார்மாட்டும் வேசை யென. (உ)

வானெறி வித்துநில னுற்றாங்கு மன்னுயிர்க்குத்
தானியற்று மெவ்வினையுந் தற்சாருஞ் சிற்சில
பானெறி யாற்பயன் பன்னாட் கழிப்பியும்
ஈனும் பனைவித் தென. (ங)

காலம் பிழைத்தக்காற் பாலுநோய் காட்டிவிடும்
நூலா ருணர்ந்தீயி னஞ்சமு நோய்வீட்டுஞ்
சீலராற் றுன்பமுந் தீயரா னின்பமுமாங்
காலங் கருதல் கடன். (ச)

பனையடியிற் பாலுணினுங் கள்ளென்ப யாக
வினையிடத்திற் கள்ளுணினு மேலென்ப செய்யும்
வினைநல்ல வேனு முலகம் வெறுக்கும்
கினைக விடத்தி னிலை. (ரு)

தலைமே லரதனமே தாங்கினும் வாயின்
நிலைகடுவாற் பாம்பஞ்சி நீங்குப யாருங்
கலைபலதேர் நுண்ணறிவ னேனுங் கடுஞ்சொல்
சொலுமாயிற் கொள்ளார் தொடர்பு. (சு)

கரவினு மிக்க கடிவினை இல்லை
இரவினு மிக்க விளிவர வில்லை
புரவினு மிக்க வரணில்லை புல்லார்ப்
பரவினுமில் மிக்க பழி. (எ)

வண்மை தவங்கல்வி வீரமிவை மற்றின்ன
ஒண்மை யுடையன வொன்றாற் புகழியாக்கை
நண்ணு மவரன்றே பொன்றா நலம்பெற்றார்
மண்ணுவார் மற்றை யவர். (அ)

பொன்னே யெனினும் புகுமிட னூற்கழல்
மன்னர் முடிபோன் மதிப்புற வில்லையால்
என்ன பெருமை யிருப்பினுஞ் சிற்றினம்
மன்னிற் கெடுமே மதிப்பு. (கூ)

சிப்பி முளரிசுர மாறு திரைவீழ்நீர்
ஒட்பத் தரளமஃ தொப்பழிவுண் ணீருவரரம்
அப்படியே மாந்த ரறிவு மினத்தியல்பால்
பற்பல மாறு படும். (கo)

பதினோராவது அதிகாரம் பொதுவியல் முடிந்தது.

---

எ. புரவு—காத்தல்.

# பன்னிரண்டாவது அதிகாரம் கல்வி.

—:o:—

சின்னாட் பழகினுந் தேர்ச்சி யிளமைக்கண்
பன்னாட் பழகினு மூப்பிற் பயனின்றால்
இன்னாவாத் தோன்றினும்பின் னின்ப மிகவுறூஉம்
முன்னாடிக் கற்க முயன்று, (௧)

கல்லாத மாக்கள் கசடறூர் செய்கருமம்
வல்லாரே யானும் வளம்பெற்றா ரானுமென்
கல்லார் மதியார் நரகிற் புகுவார்காண்
சொல்லாய்ந்து கற்க தொடர்ந்து. (௨)

பாற்கடல்பெற் றாலும் பயனே வயிற்றளவே
நூற்கட லெல்லாஞ் சுரரு நுவலரிதால்
யாக்கை யிருக்குந் துணையு மியலளவால்
போக்கறு நூல் கற்க புரிந்து, (௩)

இன்ப நூல் கற்றவீ னேற்றம் பொருணாலே
பின்பவற்றி னேற்ற மறநூலிப் பெற்றியினன்
முன்புறக் கற்க முறைப்படக் கல்லாக்கால்
என்பய னென்றானு மில். (௪)

கலைநிறைந்த வொண்மதிகண் டின்புறலிற் காசில்
புலவன் சகோரப்புட் போல்வன் சிறையோன்
றிலன்றிசை போய விசைபல கொண்டே
உலவா வுலகு முறும். (௫)

பன்றிக் குருளை படாம்போர்த்து நிற்பினும்
வென்றிக் களிறென விள்ளுப யாவரே
நன்றுகல் லார்கவி பாடினும் நாவலோர்
என்று மதித்த லிலர். (சு)

கல்லா ரெனினுமென் கற்றவரைச் சார்ந்தொழுக
வல்லார்க்கு நல்லறிவு வந்துறூஉங் கற்பனவூழ்
இல்லென்று வாளா விராஅ துறுதியுரை
நல்லார்பாற் கேட்க நயந்து. (எ)

கற்றலிற் கேட்டல் சிறப்புடைத்தாற் கற்பானுக்
குற்ற விளமைபொரு ளுக்கநோ யின்மைகுலம்
மற்றின்ன வேண்டுமால் வேண்டா நூல் வல்லார்வாய்
முற்றுறக்கேட் பார்க்கு முயன்று. (அ)

உலவாத நுண்பொருள் பேதைக் குரைத்தல்
மலர்மாலை வானரத்தின் கைக்கொடுத்தன் மானும்
நலனுடையார் தற்சாரின் நல்காதா னன்றே
பிலமிக்க பொன்காத்த பேய். (கூ)

வெற்றியுரு கோளரிப்பல் வீழ்ந்தசில கொண்டுநாய்
கொற்றப் புலிமுன் குரைப்பொக்குங் குற்றமறக்
கற்றவர்முன் முன்னா லுரைசில கற்றார்போல்
மற்றவர் கேட்டுரைக்கு மாண்பு. (க0)

பன்னிரண்டாவது அதிகாரம் கல்வி முடிந்தது.

# பதின்மூன்ருவது அதிகாரம் முயற்சி.

—:o:—

ஊழான் வருமென் றுழார்க்கு விளைவுண்டே
தாழா முயற்சி யுறுதிபெறத் தாம்வேண்டின்
வீழாமை வேண்டும் வெறிதே கணமேயும்
வாளா கழித்தன் மறு. (க)

உடையுண்வு நீக்கு முளமறிவு தேய்க்கும்
நடைகளிப்பு மாய்க்கு நலிவெல்லாந் தோய்க்கும்
திடன்மதிப்புக் கல்விகுணம் சீர்சாய்க்குஞ் சார்ந்தே
மடிதான் முயற்றில் வழி. (உ)

தலைவற்குங் காலந் தனக்குந்தான் கொண்ட
நிலைமைக்கும் வேலைக்கு நீங்காவா ளாக்கும்
நலமென்னே சேவையி னன்றுபிற வெல்லாம்
உலையாது காக்கு முழவு. (ங)

உழுத லுழுவித்த லொல்லா விடத்துந்
தொழுதா ணறிஞர்க்குத் துன்பேகற் பித்தல்
பழுதில் வணிக முதலபிற பற்றி
வழுவாது நிற்றல் வழக்கு. (ச)

தின்னக் கரும்பு தெறுவார் கரமறுப்புண்
டின்னற் படலு முளவினையி னின்புற
எண்ணித் தொடங்கி னிடருமுள வஞ்சாமே
திண்ணத்தாற் பின்னுஞ் செயல். (ரு)

கடைபோகா வாயினலங் காட்டா ரெனினும்
இடரில செய்க விருநீர்க் கிணறு
திடனுறத் தாண்டிற் சிறிதிழுக்கு மேனும்
இடரெய்த றப்பாமை யின். (௬)

தானுற்று நின்ற வினைதான் றகவருவாய்
ஈனு மெனினு மினியபிற வெய்தள்வும்
ஆனுமை வேண்டு மவ்வாவரன் விடினுய்நீர்
மீனுடி வாயூன் விடல். (௭)

வைகறை யாமந் துயிலெழுந்து நீர்மாந்திப்
பைய நடந்தொழிப்ப பற்றற நீக்கித்தான்
செய்வினையூ ணுக்குந் திறன்றெரிந்து கொள்ளுமேல்
உய்யு நெடுநா ளுடல். (௮)

நெடுந்துயில்பே ருண்டி யொழித்துண்ட நீங்கப்
படுந்துணையு முண்ணார் மருந்தெனினும் பண்பான்
விடுந்தகைய மூன்றினென்று மிக்குவிடார் காலை
ஓடுங்கார்நோ யொன்று முறார். (௯)

உண்ண லுறங்க லொழிபு முடலொப்பப்
பண்ணினா லாய்வு மளவிற் பயில்கமன்
அண்ணல் களிறனையா ரானு மவைபிறழின்
எண்ணில் பிணியுற் றிடும். (௧௦)

பதின்மூன்றாவது அதிகாரம் முயற்சி முடிந்தது.

# பதினாலாவது அதிகாரம் பொருளாட்சி.

—:o:—

பொருளா னறமுறு மின்பம் புணரும்
தெருள்வரு நூல் கற்பினது முட்டின்றிச் செல்லும்
அரிதுமுறு மொன்னார்த் தெறலு மரசும்
உரனு மதனு னூறும். (க)

எல்லா முடையா னியக்கனோட் டானெழுவர்ப்
பல்லக்கா ளாக்கினான் பல்கலைதேர் வேந்தனும்
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. (உ)

மெல்லிலை காயோ டுறுமெனினும் வெண்சுண்ணம்
இல்லாயிற் றீருன்றுது செம்மை யிறப்பவே
கல்வி குணனோ டுறினுங் கவினாதே
செல்வமில் லாயிற் சிறந்து. (ங)

இடம்பொரு ளேவ லெழுச்சிக் கயலார்
உடனிணை யாதற் குடற்றற் குவத்தற்
கடர்பல தீநெறிக் காய்வின்று பொன்னைக்
கடன்கோடல் துன்பக் களன். (ச)

---

உ. இயக்கன்-குபேரன். எழுவர்-சத்தரிஷிகள்.
ங. மெல்லிலை-வெற்றிலை. காய்-பாக்கு.
ச. உடற்றல்-சமர்செய்தல். ஆய்வின்று-ஆராயாமல்.

இன்றி யமையாக் கரும மிடர்ப்படில்
குன்று மளவு குறித்துப்பல் காணெக்கி
என்று தரலொல்லும் யாதனி னென்றுய்ந்து
சென்றுகடன் கோடல் செயல். (௫)

கடங்கொண்டு பின்னைக் கொடாது கழிப்பின்
இடங்கொண்டு நிற்கு மிகழ்ச்சி யதாஅன்று
மடங்கொள் விலங்கா வுழைப்பர்பின் வந்தே
தொடங்கற்க வித்தீத் தொழில். (௬)

தீர்வழி தேற்ற மிலையேற் சிறிதானும்
யார்வயி னுங்கடன் கோட லறிவன்றால்
தேர்வழி யீவார்பாற் சென்றிரப்பு நன்றுகரும்
பார்வழித் துன்பப் படார். (௭)

மறம்புகுத்தா வாற்றாற் பொருளீட்டி மற்றும்
இறந்து படாமைப் புரக்கவிவை செய்தும்
அறம்பொரு ளின்பப் பொருட்டெனியா னுயின்
பிறந்தும் பயனெய்தாப் பேய். (௮)

மடைத்தலை யேரி வருவாயின் மிக்க
கொடுத்தலைச் செய்யிற் கொடாதுபின் வற்றும்
அடுத்தள வாராய்ந் தளித்துண்ண லன்றே
வடித்தநூ லோர்ந்தார் வழக்கு. (௯)

---

எ. கரும்பார்-நரகம்.

பெருந்துயர மாற்றிப்பொன் னீட்டினும் பின்னை
அருந்தவர்ப் பேணு னறஞ்செய்யா னாயின்
மருந்தரிதாற் பெற்றும் வயிற்றுட்பெய் யாது
பரிந்தளற்றுட் பெய்த பதர். (௧0)

பதினால்வது அதிகாரம் பொருளாட்சி முடிந்தது.

---

## பதினைந்தாவது அதிகாரம் செருக்கின்மை.

—:0:—

தன்னினு மிக்க தவம்புகழ் கல்விமதி
பொன்னட லின்பங் குணநெறி பொற்புளார்
தன்முற் பலருளராத் தான்கண்டு மென்மனனே
கொன்னே செருக்குக் கொளல். (௧)

யாது செயலு மறிவுந் தமக்குளவென்
றோத வுளவே வுறக்கத் தொழிவதென்
ஆதியிறை கூத்தாட்டு முண்ணின் றறிவார்க்குத்
தீதன்றோ யானென் செருக்கு. (௨)

அறிவுடையம் யாமென் றகஞ்செருக்க லொன்றும்
அறியாத பான்மை யறிவுயிர்க் குண்டோ
பிறவுஞான் றின்மையிற் பின்னறிவ் வெல்லாம்
இறையா னறிவ தெனல். (௩)

---

௧0. மருந்து - அமுதம். அரிது - அரியவழி.
௩. பிறவு ஞான்று - பிறந்தபொழுது.

அண்டங் கிணற்றி னளவென் றதிற்றேரை
கண்டுரை யொக்குமாற் கல்லார் நெறிப்படப்
பண்டைநூ லெல்லாம் பயன்றெரிந்தா மென்னவே
கொண்டு களியுறாஉங் கூற்று. (௪)

கன்று பிறந்தவுடன் றாய்முலைப்பால் காட்டாமே
சென்றருந்தி யாங்குச் சிலர்தாமே காணினுமென்
றொன்றுபயில் வானவை தோன்றலிற் காட்டாமே
ஒன்றுமிலை தாமே யுணர்வு. (௫)

துக்கவெயில் காய்பிறவிக் கான்கடப்பத் தூயநெறிப்
புக்கார்க் குறிற்பொன் புயனிழல்போ லாம்பயன்
அக்கா லியல்பிற்றுச் செல்வ மதுபெற்றால்
அற்குப வாங்கே செயல். (௬)

இளையம் வலிய மெனக்களித்து நல்ல
உளவாகத் தீயசெயல் ஒஓ கொடிதே
பளகில் பருவநீர்ப் பாய்ச்சின்றிப் பைங்கூழ்
விளைவறத் தீ முட்டி விடல். (௭)

---

௫. முற் பிறப்புக்களில் தொன்று தொட்டுவந்த பயிற்சி வயத்தான் இப்பிறப்பிற் பிறர் காட்டாமற் றோன்றுவனவும் சில உண்டு என்பதாம்.

௬. மேக நிழல் வேனில் நண்பகற் பாலையில் நடப்பார்க்குப் பயன்படுதல் போல, செல்வம் பிறவிக் கான்கடப்ப முயல்வார்க்குப் பயன்படும் என்பதாம்.

இறையென முத்தொழிலுஞ் செய்யினு மென்கொல்
குறையு மறிவு செருக்கொன்று கொள்ளின்
உறுமே யிடும்பை யுயலில்லை யென்றும்
அறிவுடையான் கொள்வா னலன். (௮)

தெருளாதார்ப் பற்றுஞ் செருக்கெனும் பேயால்
குருடாம் புறக்கண்ணு நல்லசெவிக் கொள்ளா
மருளு மதிதிறப்பில் வாய்திறக்கு மேனும்
பருவந்து சோர்வு படும். (௯)

தேவருந்தீப் போற்றுப நிற்பிற் றிரியளவின்
யாவரு நீர்பெய் தவிப்ப வகம்பற்றின்
மேவாரும் போற்றுப தாமடங்கின் மிக்குழி
யாவருஞ் செய்ப விடர் (௧௦)

பதினைந்தாவது அதிகாரம். செருக்கின்மை முடிந்தது.

---

௯. மதி மருளும் வாய்திறப்பு இல் திறக்குமேனும்.........
எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

# பதினாறாவது அதிகாரம் நட்பு.

—:o:—

நடையாற் றலையாயார் நட்பைமற வாமே
கடையாயார் மாட்டுண்மை காட்டாமே மற்றை
இடையாயார் மாட்டுமிகை காணி னிடித்தல்
உடையாரே தீமை யுறார். (௧)

நாடி நலந்தீங் கவற்று ணலமிக்கார்க்
கூடுக கூடிற்பிற் குற்றங் கருதற்க
நாடுங்காற் றொன்று நவைபலவிற் காணினுடன்
வீடாது மெல்ல விடல். (௨)

சான்றவர் கேண்மை தலைப்படி னஞ்ஞான்றே
ஆன்ற பெருமை யளிக்கு முயிர்த்துணையாம்
வான்றரினுந் தீயார்தங் கேண்மை மதியற்க
தோன்றும்பி னெண்ணி றுயர். (௩)

பெரியார்தங் கேண்மை பெருந்துணையா மீண்டும்
அரிதே மறுமையினு மஃதொப்ப தொன்றில்
பெரியார் தொடர்கை விடலிற் பெருங்கே
டெரிபோற் பகையானு மில். (௪)

ஆத்திக ரெம்மத மாயினுந் தோமிலை
நாத்திகர் நட்பைக் கனவினு நாடற்க
தீத்தொழி லின்றவர் தெள்ளிய ராயினும்
[illegible] விடுமா விடர். (௫)

வெவ்வாய் நிரயத்து வீழ்த்துமாற் கீழோர்நண்
பெவ்வகை யானும் விடல்பகையு மெய்தற்க
செவ்வியோர் தம்பகை தீரும்பிற் றீராவே
எவ்வகையுந் தீயா ரிகல். (௬)

வறியரைச் செல்வர் மதித்துறவு கொள்ளல்
உறினு மறிவுடையார் பேதையரை யொன்றார்
அறிதுமவர் சேர்க்கையெனி னம்புயநீர் சேரப்
பெறுமுறவு போலாம் பிற. (௭)

அணுத்துணை வித்து மறன்மண்ணைச் சாரிற்
பணைத்த பெருமரமா மம்மரந்தீப பற்றின்
அணுத்துணையு நில்லா தறிஞர் கயவர்
கணத்துறவு மத்தகைய காண். (௮)

நீரிற் பதர்மிதப்ப நெல்லமிழ லொக்குமாற்
சூரியன் மந்த னரிய நூல் கொள்ளுமுறை
மாரி யெனத்தரினு மந்தனைவிட் டென்கொடுத்துஞ்
சூரியனைச் சார்ந்து கொளல். (௯)

---

௬. விடல் - விடுக. இகல் - பகை.

௭. பிற - அசைநிலை.

௮. அறல் - நீர்.

வளிமுதலா மூன்றொருத்து வாழினுடல் வாழும்
விளியு மவையிகலின் வேந்துமுயிர் வாழும்
உளமொத் துழையருற நான்குபகை யானுந்
தெளியானேன் மாய்வே தெளிவு. (௧௦)

பதினாறாவது அதிகாரம் நட்பு முடிந்தது.

## பதினேழாவது அதிகாரம் பகை.

—:o:—

ஆகா தனசெயினும் யார்மட்டுந் தீதுபகை
சோகாப்பத் துன்னார்ச் செறினுஞ் சுகமில்லையால்
ஏகா கவலையினி யென்னுறுங்கொ லென்றஞ்சும்
போகா கரவுசினம் பொய். (௧)

பகைத்தார்க்குங் கேடு பயப்பன சூழல்
தகைத்தன் றெனினுந்தற் சேர்ந்தாருந் தானும்
மிகைக்குட் படாது விடலெண்ணிச் செய்யின்
வகுத்தா ரறமாக வைத்து. (௨)

மிக்கோர் நடுவரெனின் வெல்லற் குபாயமுன்மூன்
றெத்திறத்துந் தண்ட மிகக்கபகை கீழாயிற்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (௩)

---

௧௦. உபகை—சோதனை. 4. அறவுபகை, பொருளுபகை இன்பவுபகை, அச்சவுபகை என்பனவாம்.

உளத்தாற் பகைத்தாரை யோராது நட்டல்
வளத்தோ டுயிர்போக்கு மந்தோ வயவர்க்
களப்பில் புறப்பகை யாற்றுயரென் னலே
விளக்கின்கண் விட்டில் விழல். (௪)

களிமயில் கோம்பியைக் கண்டஞ்சு மன்றே
எளியர் வலியரை யெற்றலு முண்டே
விளியுங் கொடும்புலியாற் கற்றுவும் வென்றி
யொளியில் கொடியார்க்கு முண்டு. (௫)

கொல்லும் பயன்குறித்துக் கோடரி யெம்மரனுங்
கொல்லாதா லஃதுறிற் காம்பெனக் கூடாரை
நல்ல குறித்தட னன்றெனினு நாடியவர்
புல்லியக்காற் காக்க புரிந்து. (௬)

கன்னியை நோன்பினைக் காப்பக் கருதியே
மன்னு மிராமனும் வீடுமனு மாறுற்றார்
தந்நல முன்னிப் பிறர்போ லுறுபவோ
பன்னிற் பெரியார் பகை. (௭)

தீதே பெயர்சொலினுஞ் சீச்சீ யெரியளற்றுக்
கேது முகடிக் கிருக்கைபிற தீவினைக்குத்
தூதுபே ராசை தொலையாத் துயர்ப்புணரி
பேதைக் குழாம்பே ணுஞ் சூது. (௮)

---

௭. இராமன் - பரசுராமன்.

பெருகுமவாத் தோல்வியினும் பின்னைத் தமக்கென்
றொருபொழுது நெஞ்சு முறுமையி னென்றுந்
திருவுடையூண் கல்வியொளி யெட்டனையுஞ் சேரார்
பருவரலே சூதின் பயன். (௯)

உணர்வொழியுங் கண்முதல வுண்ணிற் பொருள்போங்
குணம்போங் கொலைகளவு காமநிலை கொள்ளும்
பணவரவிற் றுயுமஞ்சு நீங்கா பழியும்
உணான்மிகிற் சாதலு முண்டு. (௧௦)

பதினேழாவது அதிகாரம் பகை முடிந்தது.

## பதினெட்டாவது அதிகாரம் மேலோரியல்பு.

—:0:—

முத்திக் குபாயமுணர் மூதறிஞர் மந்திரமுஞ்
சித்திக்கு வேண்டுஞ் செயலும் பிறவுமெண்ணார்
பத்திநெறி யேனுரும் பற்றற் பொருட்டுலகோ
டொத்து நடப்ப வுவந்து. (௧)

---

௯. எட்டனையும்—எள்ளளவும். வென்றி பொழுது நெஞ்சு இவற்றொடு திரு உடை ஊண் கல்வி ஒளி என எட்டையும். பருவரல்—துன்பம்.

அடுத்தார்ப் புரப்ப வவரடித் தாழ்ந்தும்
வடித்தநூ லாய்ந்தார் மதியார்தம் மேன்மை
நடித்துநீத் தானென நண்ணிய பார்த்தன்
அடித்தாழ்ந்தான் கண்டீ ரரி. (௨)

நீதித் தலைநின்ற நீர்மையர் யார்மாட்டுந்
தீதே பயப்பினுஞ் சொல்லார் திறம்புரை
சாதேவன் றன்முன் றலைதுணிப்ப நன்னுளாய்ந்
தோதினன் றெவ்வி னுழை. (௩)

தாய்தந்தை யாசான்சொற் றக்கார் மறுஅரென்றும்
ஆயி னருமறையின் மிக்க வவையன்றோ
தூய வியாத னிராமன் துணிந்துவிரல்
ஈயுமவன் சான்று மெனல். (௪)

என்சொலினுந் தாய்முதலோர் செய்த வியல்பெனினும்
புன்சொ லெனநிரய முப்ப புரியாரே
கன்னனீன் றார்சொற் கடந்தான். பலிகொன்றான்
முன்னங் குரவன் மொழி. (௫)

இறந்தா ரெழினு மிறும்பூ துறுமை
திறம்பாமை தந்நிலை தீப்புகநேர்ந் தானு
மறந்தானு மொல்வ கரவாமை யின்னம்
சிறந்த வறிவோர் செயல். (௬)

அறனறிப் பாற்புல் லருங்கானத் தன்றி
நிறைகுள மாதியுள் வேலி நிலத்துட்
சிறுமுப வுண்ணுதாற் சீரியரு மன்னர்
பிறர்தேட்டான் வாழ்வு பிழை. (எ)

அன்பா னினிதா வறத்துறையை யார்மாட்டும்
என்பா டுறினு மியம்புப நீதியால்
துன்பமுறு சொற்சொலினுஞ் சொல்லாரே யெஞ்ஞான்றும்
மென்பயனு மில்லாத சொல். (அ)

அறவோர் பிறர்பழி யாண்டு மிசையார்
உறுதி யுறவருளா னுன்னி னவர்முற்
செறலொடு சொல்லினுஞ் சொல்பவே யன்றிக்
குறைபுறன் கூறுர் குறித்து. (கூ)

கூகை பகற்கட் குருடெனின் யார்குற்றம்
ஈகையரில் லென்னி னிரப்பார்தங் குற்றமே
சோகம் பெரியாரைச் சார்ந்துந் தொடர்ந்தக்கால்
ஆதுமே குற்ற மவர்க்கு. (க0)

பதினெட்டாவது அதிகாரம் மேலோரியல்பு முடிந்தது.

# பத்தொன்பதாவது அதிகாரம் கீழோரியல்பு.

—:0:—

இரவு விளக்கங் குருடேந்திச் செல்லின்
வருவோர் வழிவிலங்கு மாறுணர்த்தி யற்றே
பெரியா ரவைப்புக்குப் பேதைநா ணாமை
தெரியத்தன் றீவாய் திறப்பு. (க)

வெள்ளெண்பு பெற்றநாய் தூண்ட விடக்குறின்
கொள்ளு நனிகளி கோடியும் வேண்டுமோ
உள்ளதுட னிம்மி மிகினு முறுபகீழ்
வெள்ளத் தனைய வியப்பு. (உ)

வேந்தொடு பொற்சிவிகை மேவி யறுசுவையூண்
மாந்தினும் பவ்வீ மறக்குமே நாய்கீழும்
வேந்த னெனத்திரு மேவினும் வெஃகுமே
போந்துபரி தானப் பொருள். (ங)

களைப்பினும் பல்காற் கனல்சுட விட்டில்
விளக்கத்துப் பின்னும் விழுந்துயிர் மாயும்
அளப்பி றுபரத் தழுந்தினுங்கீழ் பின்னுங்
களித்துவிழுங் காமக் கனல். (ச)

அருத்தினும் பாலை யராக்கடு வன்றிக்
குருத்திண் மணிகொடா கொன்றுகொளா ராயின்
வருத்திற் பயன்படுங்கீழ் நன்றியற்றின் மாய்க்குங்
கருத்துடையார் நாடல் கடன். (ரு)

---

ங. வெஃகும்—விரும்பும்.

ஒற்றுயிரைச் சாரி லுருத்திரியு மாத்திரைபோம்
பற்றிய வன்மை முதல படாமன்னே
கற்ற ரவைச்சாரிற் காட்டும் பலவுருக்கீழ்
பற்றுவிடா வுள்ளதும்போம் பண்பு. (சு)

இடுகாட்டை நன்கா டெனவிசைத்து மச்சொல்
இடுகாடே தன்பொரு ளென்றுணர்த்துஞ் சான்றோர்
வடுவுரையா மென்றுதம்போன் மாண்பினரென் றுலுங்
கெடுவுடைமை காட்டிவிடுங் கீழ். (எ)

முல்லை குறிஞ்சி முறையிற் றிரிந்துபெயல்
இல்லாமை யாற்பாலை யென்னப் படிவமுறும்
வல்லார் செயலு மனமும் புகழறம்
புல்லாவேற் புன்மை புகும். (அ)

கற்பன கல்லாக் கயவர் கருமங்கள்
நிற்பன வல்ல நினைந்தன செய்வரால்
அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது. (கூ)

வளித்துணை பெற்றக்கால் வன்னிசுடு மக்கால்
ஒளித்தக்காற் றுனு மொளியுங் கயமை
இளைத்த பொழுது மொளியாதே யெல்லாங்
கொளுத்தலின் யாமஞ்சுங் கூற்று. (க0)

பத்தொன்பதாவது அதிகாரம் கீழோ ரியல்பு முடிந்தது.

# இருபதாவது அதிகாரம் மேல்கீழியல்பு.

—;o:—

தலையாயா ரேனையோர்ச் சாரினுந் தங்கண்
நிலையிற் பிரியாதந் நீரவே கீழுந்
தலையாயார்ச் சாரிற் றலையாய்க்கீழ் சாரின்
நலமில்கீ ழாமே நடு. (க)

சிரியர் செம்மை திறம்பார் மிடியினும்
பூரியர் செல்வம் பொருந்தினு மென்பயன்
சீரிற் சிறந்து மிடியிற் சிதையுமே
பாரி னிடையாயார் பண்பு. (உ)

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்பமேல்
இன்னாவே செய்யு மினியசெய் தார்க்குங்கீழ்
இன்னாத செய்தார்க் கிகலா யினியசெயும்
இன்னாத செய்யார்க் கிடை. (ங)

கரும்பொடு கூட்டினும் வேம்பினிமை காட்டா
இரும்புட னொன்றினு மேமமியல் குன்றா
கரும்பாநீர் வேம்பா மவற்றின் கலப்பின்
இரும்பிடைமேல் கீழமன்ன வே. (ச)

தென்றலினு நண்பஞ்சு சேட்சென் றலைவுபடும்
என்றும் பெயரா பெருங்காற் றெனினுமலை
ஒன்றிற் சிறுபடரு மாற்றா துடையுங்கீழ்
வென்றிடுமேத் துன்பினையு மேல். (ரு)

காய்த்த விளைநெற் கதிரிறைஞ்சல் காண்டுமால்
கோத்த பதர்கொள் குலைநிமிர்வே கொள்ளுமுல
கேத்து மறிஞர்க் கியல்பு பணிவுடைமை
வாய்த்தலிலை பேதை வயின். (௬)

இரவியிருள் சீக்கும் புயல்மறைக்கு மேனும்
பெரியார் மிடியினும் பீழை துடைப்ப
திருவுற்ற போதுந்தா முண்ணலுங்கீழ் செய்யா
இருமணிபாம் பெய்தினு மென். (௭)

நன்றொரு கோடி செயினுமவை நாடாமே
ஒன்றுநவை நாடி யூறு புரிவகீழ்
கொன்றன்ன தீங்குபல செய்யினுங் கொள்ளாமே
நன்றுன்னல் சான்றோர் நடை. (௮)

உவ்வொடு குற்றுகர மொக்கு முருவெனினும்
தவ்வெனுந் தன்மைசார் வல்லாறு தாங்காட்டுஞ்
செவ்வியர் போல்வர் சிறியரும் வல்லாறே
வெவ்வேறு காட்டி விடும். (௯)

நகையீகை யின்சொலே நாண்செம்மை வாய்மை
பகையுமிக ழாமை பணிவொழுக்க மென்று
இகவாத நாரென வீரைந்து மேல்கொள்
வகைநில்லா கீழோர் வயின். (௧௦)

இருபதாவது அதிகாரம் மேல் கீழியல்பு முடிந்தது.

இன்னிசை இருநூறு முடிந்தது.

வேலுமயிலுந் துணை.

K. CHIDAMBARANATHA MUDALIAR
27 JUN 1914